# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தம்)

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தைத் திருத்துவதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட மற்றும் அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.**

---

துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்களால்
2026 சனவரி மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 திசெம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

**[50 ஆம் சட்டமூலம்]**

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 29.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகம் 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற்படுத்தப்படாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்திற்கான விரிவுப்பெயரைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது கொள்கலம் செயற்படுத்துநர்களை அச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து நீக்கிவிடுவதாகும்.

***வாசகங்கள் 3, 4 மற்றும் 5:*** இவ்வாசகங்களினால் செய்யப்பட்ட திருத்தங்கள் 2ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

## கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தம்)

ச.வ. - ஓ 62/2023

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தைத் திருத்துவதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட மற்றும் அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்துக்கான விரிவுப்பெயர், **"கப்பற்சரக்கனுப்புநர், கலன்செயற்படுத்தப்படாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர் தொழிலைக்"** என்னும் சொற்களுக்குப் பதிலாக **"கப்பற்சரக்கனுப்புநர் மற்றும் கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர் தொழிலைக்"** என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

PL 15624 - 172 (2026/01)

கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற்படுத்தப் படாப் பொதுக் காவுநர் மற்றும் கொள்கலம் செயற் படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டம் மற்றும் கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற் படுத்தப்படாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர் என்போர் முறையே கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற் படுத்தப் படாப்பொதுக் காவுநர் சட்டம் மற்றும் கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற் படுத்தப்படாப் பொதுக் காவுநர் என்போராக அறியப்படுதல்

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் பின்வருவன பதிலிடப்படுதல் வேண்டும்:-

(அ) "கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற்படுத்தப்படாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு உரிமமளித்தல் சட்டம்" என்னும் சொற்கள்; அத்துடன்

(ஆ) "கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற்படுத்தப்படாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர் என்னும் சொற்களுக்குப் பதிலாக "கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்" என்னும் சொற்கள்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டம்" பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும், "கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு உரிமமளித்தல் சட்டம்" பற்றிய ஒரு குறிப்பீடாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, "கொள்கலம் செயற்படுத்துநர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**5.** வேறேதேனும் சட்டத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக – பேணல்களும் நிலைபெயர்கால ஏற்பாடுகளும்

(அ) முதன்மைச்சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் கொள்கலம் செயற்படுத்துநர் தொடர்பிலான உரிமத்தை வழங்குவதற்காகச் செய்யப் பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளதுமான ஏதேனும் விண்ணப்பம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கொள்கல நிலையத் தொழிற் படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப் படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறை யில் குறிப்பாக இடை நிறுத்தப்படும்வரை அல்லது இல்லா தாக்கப்படும்வரை, கொள்கலத் தெரிற்படுத் துநருக்கு வழங்கப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளவையுமான எல்லா உரிமங்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கொள்கல நிலையத் தொழிற் படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின்ஏற்பாடுகளின்கீழ்வழங்கப்பட்ட உரிமங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.